**25 schools reopened in Northern Vavuniya educational zone**

Virakesari – Tuesday 09-03-2010

## வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 25 பாடசாலைகள் மீள ஆரம்பம்

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் அமைந்துள்ள 73 பாடசாலைகளில் 25 பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வவுனியா வடக்கு கல்விப் பணிப்பாளர் திருமதி அன்டன் சோமராஜா தெரிவித்தார்.

யுத்தம் காரணமாக பாடசாலை மூடப்பட்டு இயங்காத நிலையில் காணப்பட்ட போதிலும் நலன்புரி நிலையங்களில் தற்காலிகமாக இயங்கிவந்தது.

தற்போது வவுனியா வடக்கில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு வருகின்றமையினால் அப்பாடசாலைகள் தமது சொந்த இடங்களில் இயங்குவதற்கான ஏற்பாடுகளை வவுனியா வடக்கு கல்வி வலயம் மேற்கொண்டிருந்த நிலையில், இது வரையில் 25 பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இவற்றில் நெடுங்கேணி கோட்டத்திலேயே அதிகளவான பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஏனைய பாடசாலைகள், தொடர்ந்தும் தற்காலிகமாக நலன்புரி நிலையங்களிலேயே இயங்கி வருகின்றன.